மூ.மு.5776/2023 (அ4) நாள். 20 .07.2023

வட்டாட்சியர் அலுவலகம்,
ஒசூர்.

அணுகு பாதை சான்று

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், மத்திகிரி உள்வட்டம், மத்திகிரி கிராம பட்டா எண்.7815, 8061, 8062 மற்றும் 8063 ஆகிய பட்டா எண்களில் உள்ள புல எண்கள்.721/1B4C1, 721/57, 721/55, 721/56 ஆகிய புலங்களில் 0.28.01 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அணுகு சாலை சான்று கோரி மனு அளித்துள்ளதன் பேரில், புலத்தணிக்கை மற்றும் விசாரணை செய்யபபட்டது. மனுதாரர் அணுகு சாலை சான்று கோரும் மத்திகிரி கிராம புல எண்.721/1B விஸ்தீரணம் 0.45.0 ஹெக்டேர், தீர்வை 0.49 கொண்ட நிலம், புல எண்.719/4 விஸ்தீரணம் 0.75.0 ஹெக்டேர், தீர்வை 2.08 கொண்ட நிலம் மற்றும் புல எண்.755/B4 விஸ்தீரணம் 1.46.5 ஹெக்டேர், தீர்வை 4.96 கொண்ட நிலம் ஆகியவை நிலஉடமை பதிவு மேம்பாட்டுத்திட்ட "அ" பதிவேட்டின் படி பட்டா எண்.278, 277, 64 ஆகியவற்றில் முறையே சிவண்ணா, மு.சிவலிங்கம்மா மற்றும் வீ.ஈரம்மா ஆகியோர் பெயர்களில் தாக்கலாகியுள்ளது. உட்பிரிவுக்கு பின்னர் தற்போதைய கணினி சிட்டாவின் படி பின்வருமாறு தாக்கலாகி மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது.

வ எண்	புல எண்	விஸ்தீரணம் (ஹெக்டேரில்)	தீர்வை (ரூபாயில்)	பட்டா எண்	பட்டாதாரர் பெயர்
01	721/1B4C1	0.08.37	0.10	7815	சிவண்ணா மகன் சிரியாலா
02	721/55	0.03.44	0.10	8062	சிரியாலா மனைவி விஜயரஞ்சனி
03	721/56	0.08.10	0.10	8063	
04	721/57	0.08.10	0.10	8061	

அணுகுசாலை சான்று கோரும், மத்திகிரி கிராம புல எண்கள்.721/1B4C1, 721/57, 721/55, 721/56 ஆகிய புலங்களில் 0.28.01 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, ஒசூர்-தேன்கனிக்கோட்டை பிரதான சாலையிலிருந்து, பாரத் நகர் வழியாக, மத்திகிரி கிராம பட்டா புல எண்.719/4 விஸ்தீரணம் 0.75.0, தீர்வை ரூ.2.08 கொண்ட நிலம் மற்றும் பட்டா புல எண்.755/B4 விஸ்தீரணம் 1.46.5 கொண்ட நிலத்தின் வழியே செல்லும் 25அடி அகல பஞ்சாயத்து தார்சாலை இதனை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு இடையில் அணுகு சாலையாக உள்ளது என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

வட்டாட்சியர்,
ஒசூர்.

பெறுதல்
திரு.சிரியாலா
க.எண்.2-26-1, மிடிகிரிப்பள்ளி கிராமம்,
H.C.F அஞ்சல்,
ஒசூர் வட்டம்.- 635 110.

நீர்வளத்துறை

அனுப்புதல்

பொறி.ச.குமார், பி.இ.,
செயற்பொறியாளர். நீவது.,
மேல்பெண்ணையாறு வடிநில கோட்டம்.
தருமபுரி -5. Ph: 04342-230990.

பெறுதல்

திரு.எஸ்.சீரியாளா மற்றும்
திருமதி.விஜயரஞ்சினி,
எண்.2-26-1, மிடிகரப்பள்ளி கிராமம் மற்றும்
அஞ்சல், ஓசூர் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

க.எண்.137/ கோ. 180 / 2023 / வ1 / நாள்: 16 .03.2023

அய்யா,

பொருள் : கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், மத்திகிரி கிராம புல எண்.721-ன் வழியாக செல்லும் நிலவியல் நிர்வழி பாதையினை மாற்றி அமைக்க தடையின்மை சான்று வழங்க கோரியது -தொடர்பாக.

பார்வை :

1. தங்கள் கடித நாள். 10.03.2023.
2. உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., மேல் பெண்ணையாறு வடிநில உபகோட்டம், ஓசூர் அவர்களின் கடித எண். /கோ.62/ 2023 / உ.செ.பொ / நாள். 15.03.2023.

பார்வை 1-ல் காணும் தங்கள் கடிதத்தில், தங்களது சொந்த பட்டா நிலம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், மத்திகிரி கிராம புல எண். 721/1B4C1,721/55,721/56,721/57-ல் உள்ளதாகவும், மேற்கண்ட பட்டா நிலத்திற்கு குறுக்கே நிலவியல் ஓடை இருப்பதால் அதன் நீர்வழிப்பாதையினை மாற்றி அமைப்பதற்கு தடையில்லாச் சான்று வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து., மேல் பெண்ணையாறு வடிநில உபகோட்டம், ஓசூர் அவர்கள் மேற்கண்ட இடத்தை தள ஆய்வு செய்ததில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், மத்திகிரி கிராம புல எண்.721-ன் வழியாக செல்லும் ஓடையானது தென்கிழக்கில் இருந்து வடமேற்கின் வழியாக மத்திகிரி கிராம புல எண்.580-ல் உள்ள அந்திவாடி ஏரியின் வரத்து கால்வாய் ஆகும். இவ்வோடையில் மழைக்காலங்களில் மட்டுமே நீர் வருவதாக தள ஆய்வில் தெரிய வருகிறது. தற்பொழுது மனுதாரரின் பட்டா நிலமான புல எண். 721/56 மற்றும் 721/57-ன் குறுக்கே செல்லும் நிலவியல் ஓடையினை புல எண்ணில் மாற்றம் ஏற்படாமல் தனது சொந்த செலவில் நிலத்தின் நில மட்டத்திற்கு (Ground Slope) ஏற்றவாறு 1.80 மீ அகலத்திற்கு கான்கிரீட் கால்வாயும் 0.50 மீ அகலத்திற்கு கான்கீரிட் சுவர் அமைத்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளதின் பேரில் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், மத்திகிரி கிராமம் மனுதாரரின் பட்டா நிலமான புல எண்.721/56 மற்றும் 721/57-ன் குறுக்கே செல்லும் நிலவியல் ஓடையின் உள்அகலம் 1.80 மீ, பக்கவாட்டு சுவர்கள் 0.50 மீ அகலத்திற்கும் கான்கீரிட் கால்வாய் அமைத்துக் கொள்ள வேண்டும்.
2. மழைநீர் ஓடையில் தங்கு தடையின்றி செல்லும் வகையில் உரிய வடிவமைப்புடன் அவ்வப்போது பராமரிப்பு பணியும் தங்களது சொந்த செலவில் செய்திட வேண்டும்.

த.பி.ப.,

3. புதியதாக அமைக்கப்படும் வீட்டுமனைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் எக்காரணம் கொண்டும் ஓடையில் கலக்கா வண்ணம் தனியாக கழிவுநீர் வாய்க்கால் அமைத்து வெளியேற்றப்பட வேண்டும். அதேபோல் புதிதாக அமைக்கப்படும் வீட்டுமனைகளிலிருந்து கட்டப்படும் கட்டிட பயன்பாட்டிற்காக அமைக்கப்படும் செப்டிக் டேங் கழிவுகளை எக்காரணம் கொண்டும் ஓடையில் கலக்கப்பட கூடாது.
4. மேற்படி புதிய வீட்டுமனைகளில் கட்டப்படும் கட்டிடங்களிலிருந்து வரும் கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைகளை ஓடையில் கொட்டாமல் வெளியே கொண்டு சென்று கொட்ட வேண்டும்.
5. ஓடையில் வரும் நீரோட்டத்தை பாதிக்கும் வகையில் ஓடையின் குறுக்கே எவ்வித கட்டுமானங்களும் கட்டப்பட கூடாது.
6. நீர்வளத்துறையின் அதிகாரிகள் எந்த நேரத்திலும் ஓடையினை ஆய்வு செய்ய அனுமதி உண்டு.
7. இயற்கை இன்னல்களால் ஏற்படும் இடர்பாடுகளுக்கு இத்துறை ஏதும் பொறுப்பேற்காது.
8. இந்த அனுமதி தற்காலிகமானது. அரசுக்கு தேவைப்படும் போதோ அல்லது மேற்கண்ட நிலம் அரசின் வேறு திட்டங்களுக்கோ / பயன்பாட்டிற்கோ தேவைப்பட்டால் இந்த அனுமதி தங்களுக்கு எவ்வித முன்அறிவிப்பின்றி ரத்து செய்ய இத்துறைக்கு முழு உரிமை உண்டு.
9. இந்த அனுமதியை வேறு எவருக்கும் மாற்றக்கூடாது.
10. இத்துறையிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்ற 6 (ஆறு) மாதங்களுக்குள் பணிகள் துவக்கப்பட வேண்டும். ஆறு மாதங்கள் கடந்துவிட்டால் அறிவிக்கப்பட்ட அனுமதி செல்லாது இத்துறையிடம் தனியாக மறு அனுமதி கண்டிப்பாக பெறப்பட்டு பின்பு தான் பணிகள் துவக்கப்பட வேண்டும்.
11. தங்களால் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில், எவையேனும் போலியானவை என பிற்காலத்தில் தெரிய வந்தால், இத்துறை மூலம் வழங்கப்படும் அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக ரத்து செய்யப்படும்.
12. இதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு இத்துறை பொறுப்பேற்காது.
13. பிற்காலத்தில் உயர்அதிகாரிகளாலோ அல்லது பொது மக்கள் மூலமாகவோ ஏதேனும் ஆட்சேபனை வரப்பெற்றால் அது நியாயமானதாக இருக்கும் பட்சத்தில் வழங்கப்படும் அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக ரத்து செய்யப்படும்.
14. தற்போது மாற்றி அமைக்கப்படும் நீர்வழிப்பாதையின் விபரங்களை வருவாய் துறையினரின் பதிவேடுகளில் தங்கள் சொந்த செலவில் திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.

13/12

செயற்பொறியாளர், நீவது,
மேல்பெண்ணையாறு வடிநில கோட்டம், தருமபுரி.

17/12/12